பார்வைக்கு எடுத்துச் செல்லப்படும். மாநிலத்தில் இருக்கக்கூடிய அனைத்து அங்காடிகளும் சொந்தக் கட்டடத்தில் இயங்க வேண்டும் என்பதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மேட்டுக்காரன் கிராமத்தில் பகுதிநேரக் கடை அமைத்துத் தருவதற்கான வாய்ப்பு இருக்கின்றதா என்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் இதுவரை 50 பகுதிநேரக் கடைகள் புதியதாகத் திறக்கப்பட்டுள்ளன. இது மிகப் பெரிய எண்ணிக்கை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்மட்டும், 50 புதிய பகுதிநேர அங்காடிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. தற்போது 558 முழுநேர அங்காடிகள், 217 பகுதிநேர அங்காடிகள் என மொத்தம் 775 அங்காடிகள் இராமநாதபுரம் மாவட்டத்தில் இயங்கி வருகின்றன. இவை அனைத்திலும் பொருட்கள் சீராக வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 290, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

290—

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சித்த மருத்துவக் கல்லூரி

***34365—திரு. கடம்பூர் ராஜு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி தொகுதி, குருமலை மலைப் பகுதிக்கு அருகில் அரசு சித்த மருத்துவக் கல்லூரி துவக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன்.

கோவில்பட்டி தொகுதி, குருமலை மலைப் பகுதிக்கு அருகில் அரசு சித்த மருத்துவக் கல்லூரி தொடங்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள்.

திரு. கடம்பூர் ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மாதான் கழகம், கழகம்தான் அம்மா; (மேசையைத் தட்டும் ஒலி) அம்மாதான் தமிழினம், தமிழினம்தான் அம்மா; லேப்டாப் பெறும் இலட்சக்கணக்கான மாணவச் செல்வங்களின் லப்-டப் என்ற இதயத் துடிப்புதான் அம்மா, எங்களுக்கு எல்லாமே அம்மாதான் என்று சொல்லி, முடிந்துபோனவர்களின் கதை நிரந்தரமாக முடியட்டும், அல்லல் இல்லாத தமிழகம், மாண்புமிகு அம்மா அவர்கள் தலைமையில் மீண்டும் விடியட்டும் என்கிற ஒட்டுமொத்தத் தமிழர்களின் எதிர்பார்ப்பை (மேசையைத் தட்டும் ஒலி) 2016-ல் நூறு சதவிகித வெற்றியுடன் படைக்கக் காத்திருக்கும் எங்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கை எழில்கொஞ்சும் அருமையான தட்பவெப்பம், ஓங்கி உயர்ந்த அடர்ந்த மரங்கள், துள்ளிக் குதிக்கும் முயல்கள், ஓடி விளையாடும் மான்கள், வானமே பொய்த்தாலும் எக்காலத்திலும் வற்றாத சுவையான நீரையுடைய சுனை, இப்படி அமைதி தவழும் தாராளமான இடம், எல்லாவற்றுக்கும் மேலாக வரலாற்று பிரசித்திப் பெற்ற இடம். இராம பக்த அனுமன் லக்குமணனுக்கு சஞ்சீவி இலையைக் கொண்டுசென்றபோது கீழே விழுந்த மண் துகள்தான் குருமலை என்று வரலாறு கூறுகின்றது. எங்கும் மூலிகைகள் நிறைந்த பகுதியாக உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாக ஒரு முறை இந்த இடத்தைப் பார்வையிட்டால், இங்கே சித்த மருத்துவக் கல்லூரி என்ன, மாண்புமிகு அம்மா அவர்கள் தென்மாவட்டத்தில் அமைக்கப்படும்

என்று அறிவித்துள்ள பல் மருத்துவக் கல்லூரியைக்கூட இங்கே அமைக்கலாம் என்ற எண்ணம் தோன்றும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய மருத்துவ சிகிச்சை முறைகளான சித்தா, ஆயுர்வேதா, யுனானி, யோகா மற்றும் இயற்கை மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆகிய 5 பிரிவுகளிலும் அரசு மருத்துவக் கல்லூரி அமைந்துள்ள ஒரே மாநிலம் நம்முடைய தமிழ்நாடு மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) மிகப் பழமையான மருத்துவ முறைகளில் 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றியதாகக் கருதப்படும் சித்த மருத்துவத் துறை, தமிழ் சமுதாயத்தின் மேம்பட்ட அறிவிற்கான உதாரணமாகத் திகழ்கிறது. இந்த மருத்துவ முறையின் தேவை மற்றும் முக்கியத்துவத்தை உணர்ந்த முதலமைச்சர்தான் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இன்றைக்கு இந்திய மருத்துவ முறை சிகிச்சைக்காக, ஏற்கெனவே 2 அரசு சித்த மருத்துவக் கல்லூரிகள், ஒன்று சென்னையிலும், மற்றொன்று திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையிலும் மிகச் சிறப்பான முறையிலே செயல்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்லாமல், 31 மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், 238 வட்டம், வட்டம்சாரா மருத்துவமனைகள், 954 ஆரம்ப சுகாதார நிலையங்கள் என அனைத்திலும் இந்திய மருத்துவ முறைகளுக்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டு மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், டெங்கு போன்ற தொற்று நோய்களைக் கட்டுப்படுத்த மலைவேம்பு மற்றும் பப்பாளி இலைச் சாறு மற்றும் நிலவேம்புக் குடிநீர் ஆகிய பாரம்பரிய மருந்துகளைக் கண்டறிந்து, அதைக் கொடுத்த காரணத்தினால் இன்றைக்கு தமிழகத்திலே

டெங்குக் காய்ச்சல் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, தற்போது தலைநகர் டெல்லியையே மிரட்டும் டெங்கு, மருத்துவத் தலைநகரான தமிழ்நாட்டை நெருங்கவே அச்சப்படுகின்ற சூழ்நிலையை உருவாக்கியுள்ளார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள், நோயற்ற மாநிலமாகத் தமிழகத்தை இன்றைக்கு உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். ஆக, அந்தவகையிலே இவ்வளவு சிறப்புமிக்கது இந்தச் சித்த மருத்துவம். இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் இருக்கிற சித்த மருத்துவர்களாலே ஓரே நேரத்திலே பாராட்டப்பட்டிருக்கின்ற அறிவிப்பான 'அம்மா மகப்பேறு சஞ்சீவி' என்ற அற்புதமான பொக்கிஷத்தையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இத்தனை நடவடிக்கைகளும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்ட கோரிக்கையைப் பூர்த்தி செய்யும் என்று கருதுகின்றேன். வருங்காலத்திலே அதுகுறித்து அரசு யோசிக்கும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்து, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மீதமுள்ள வினாக்கள் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)*

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.*

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசுக்குச் சொந்தமான போக்குவரத்துக் கழகம் ஒன்று...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்குத்தான் எல்லோரும் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அனுப்பி, பதில் வாங்கி, பின்னர் எடுத்துக்கொள்வது